# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்குமாகாணம்

## முதலாம் தவணைப் பரீட்சை – 2020

பாடம்:-குடியியற் கல்வி | நேரம்:- 3 மணித்தியாலம்

தரம்:- 11 | சுட்டெண்:-……………..

### குடியியற் கல்வி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களிற்கு சரியான விடையின் கீழ் கோடிடுக**

1) நேரடி சனநாயகத்தின் பிறப்பிடமாகக் குறிப்பிடப்படும் நகரம்.

1. உரோம். 2. லண்டன். 3.எதேன்ஸ் 4. ஸ்பாட்டா

2)"சனநாயக ஆட்சி அனைவரினதும் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் ஆட்சி முறையாகும்" இக் கருத்தினைக் கூறியவர்.

1. சீலர். 2. காணர்.
3.ஆபிரகாம் லிங்கன் 4. ஜீ. டி. எச். கோல்

3)இலங்கையில் மிகவும் குறைந்தளவு வாக்காளர்களைக் கொண்ட மாகாணம் எது? (2019 ஆண்டின் வாக்காளர் எண்ணிக்கைப்படி)

1.மேல் மாகாணம். 2. தென் மாகாணம்.
3. மத்திய மாகாணம் 4 வடமாகாணம்

4)மனிதன் தனது சமூக வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கு தேவையான நிபந்தனைகள்.

1. சட்டம் எனப்படும். 2. கடமை எனப்படும்
3. உரிமை எனப்படும் 4. சமத்துவம் எனப்படும்

5)பின்வருவனவற்றுள் கூட்டாட்சியைக் கொண்ட நாடு எது?

1. பிரான்ஸ் 2. இந்தியா
3.யப்பான் 4. பிரித்தானியா

6)சுவிட்சர்லாந்தின் இறுதியாக அரசியல் யாப்பு சீர்திருத்தம் செய்யப்பட்ட வருடம்.

1. 1998 2. 1999 3.1996 4. 1997

7)பின்வருவனவற்றுள் பன்மைப் பண்பாட்டுச்சமூகம் தொடர்பான வரைவிலக்கணங்களை **முன்வைக்காதவர்** யார்.?

1. T. B. டெயிலர்  
2. சார்ள்ஸ். A. எல்வூட்  
3.ஏ.வீ. டைசி  
4. உ. கூ. ஹீலர்

8)சமய அடிப்படையில் இலங்கையின் சனத்தொகையில் கிறீஸ்தவ சமயத்தினரின் சதவீதம் (2012 ஆம் வருட குடிசன மதிப்பீட்டின்படி)

1. 7.4 %  
2. 9.4 %  
3. 9.2 %  
4. 4.1 %

9)வேற்றுமைக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துதல் என்னும் பன்மைப் பண்பாட்டுத் தன்மையை மிகவும் பயனுடைய தாக்கிய ஆசியநாடு எது?

1. இந்தியா  
2. தாய்லாந்து  
3.சிங்கப்பூர்  
4. கம்போடியா

10) தேவைகளை பூர்த்தி செய்வது தொடர்பாக ஏற்படும் ஆசைகளை எவ்வாறு அழைப்பர்.

1. பொருளாதாரமுறை  
2. அருமை  
3.விருப்பங்கள்  
4. உற்பத்தி

11) பின்வரும் உற்பத்திப் பொருட்களுள் நுகர்வுப் பொருள் எது?

1. மரப்பலகை  
2. மருந்துகள்  
3.உரம்  
4. வாகனங்கள்

12) உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு விசேட அனுசரணை வழங்கிவரும் பொருளாதாரமுறை எது?

1. சமதர்மப் பொருளாதார முறை  
2. கலப்புப் பொருளாதாரமுறை  
3.முதலாளித்துவப் பொருளாதார முறை  
4. சந்தைப் பொருளாதார முறை

13) பின்வருவனவற்றுள் வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் அங்கத்துவம் **பெறாத** நாடு எது?

1. ஐக்கிய அமெரிக்கா  
2. மெச்சிக்கோ  
3.கனடா  
4. பிறேசில்

14) மாகாண மேல்நீதிமன்ற நீதிபதிகள் யாரால் நியமிக்கப்படுகின்றனர்.

1. சட்டமா அதிபர்  
2. சனாதிபதி  
3.பிரதமநீதியரசர்  
4. நீதி அமைச்சர்

15) பின்வருவனவற்றுள் எது மோதல் முக்கோணியின முக்கியமான மூன்று கூறுகளில் ஒன்றாகும்.

1. திறன்கள்  
2. அறிவு  
3.நடத்தை  
4. சிந்தனை

16) ஒருநாட்டில் வாழும் மக்களிடையே ஏற்படும் தனியாள் மோதல் மற்றும் சமூக மோதல் என்பன அறியப்படுவது

1. சர்வதேச மோதல்
2. உள்ளக மோதல்
3. கொள்கை ரீதியான மோதல்
4. பொருளாதார மோதல்

17) அரசினால் செயற்படுத்தப்படும் உரிமைகள் ,கடமைகள் தொடர்பான ஒரு தொகுதி.

1. இறைமை எனப்படும்
2. நீதி எனப்படும்
3. சட்டம் எனப்படும்
4. அதிகாரம் எனப்படும்

18) பின்வருவனவற்றினுள் குடியியல் சட்டத்தினுள் **அடங்காதது** .

1. வர்த்தக நடவடிக்கைகள்
2. சிறுவர் துஷ்பிரயோகம்
3. காணிப்பிரச்சினை
4. திருமணப்பிரச்சினை

19) இலங்கையில் உத்தியோகசார்புள்ளவர்களை விட உத்தியோகசார்பற்றவர்களின் எண்ணிக்கை முதன்முதலாக அதிகரித்த அரசியல் யாப்பு சீர் திருத்தம் எது?

1. சோல்பரி யாப்பு
2. டொனமூர் யாப்பு
3. குறுமக்கலம் யாப்பு
4. மனிங் யாப்பு

20) இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளுள் பொது உபயோக சேவைகளில் **அடங்காத** செயற்பாடு எது?

1. முறையற்ற கட்டடங்களை அப்புறப்படுத்துதல்
2. நீர் விநியோக நடவடிக்கை
3. பொதுச்சந்தைகளைப்பராமரித்தல்
4. பொது இடங்களுக்கு மின்னொளி வசதி செய்தல்

21) பொறுப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பான கடமை எவ்வாறு அழைக்கப்படும்.

1. பொறுப்பேற்றல்
2. பொறுப்பினைப்பகிர்தல்
3. பொறுப்புக்கூறல்
4. பொறுப்பினை பரவலாக்குதல்

22) இலங்கையில் அதிகூடிய எண்ணிக்கையான உள்ளூராட்சி மன்றங்களைக் கொண்ட மாகாணம் எது?

1. கிழக்கு மாகாணம்
2. மேல் மாகாணம்
3. மத்திய மாகாணம்
4. தென் மாகாணம்

23) இலங்கையில் கிராமசபைகள் மூலம் கிராம நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டமை பற்றி கி.பி 1681ஆம் ஆண்டு எழுதப்பட்ட பின்வரும் எந்த ஆதாரத்தின் மூலம் உறுதிப்படுத்தப் பட்டது.
1. றொபேட் நொக்சின் குறிப்புக்கள் 2. ஜோன் டொயிலியின் குறிப்புக்கள்
3. பிலிப்ஸ் பல்டியசின் குறிப்புக்கள் 4. R.L. புரோஹியரின் நூல்

24) நீதிச்சேவை ஆணைக்குழுவில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் எத்தனை பேர் உறுப்பினர்களாக செயற்படுவர்
1. 4 2. 3 3. 2 4. 5

25) ஒம்புடஸ்மன் அல்லது நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் நாயகம் யாரால் நியமிக்கப்படுகின்றார்.
1. சட்டமா அதிபர் 2. பிரதமநீதியரசர் 3. சனாதிபதி 4. சபாநாயகர்

26) மோதல் தீர்வு தொடர்பாக தனிநபர் கொண்டிருக்க வேண்டிய பண்பானது.
1. புரிந்துணர்வு 2. செவிமடுத்தல் 3. தியாகசிந்தனை 4. அனுபவமுதிர்ச்சி

27) மோதல் தீர்வு முறைகளில் மரபு வழிச் செயற்பாடாகக் குறிப்பிடக் கூடியது.
1. உடன்படுதல் 2. காப்பாற்றுதல் 3. இணக்கப்பாடு 4. தீர்ப்புக்கூறல்

28) வங்காள விரிகுடாவை சூழ உள்ள நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு (BIMST-EC) அமையத்தில் அங்கத்துவம் **பெறாத** நாடு எது?
1. தாய்லாந்து 2. மலேசியா 3. இந்தியா 4. மியான்மார்

29) தனியாட்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களை நேரடியாக பூர்த்தி செய்ய உதவுகின்ற பொருட்கள் எவ்வாறு அழைக்கப்படும்.
1. இடைநிலைப்பொருட்கள் 2. நுகர்வுப் பொருட்கள்
3. மூலதனப்பொருட்கள் 4. அத்தியவசியப் பொருட்கள்

30) அரசியல் அமைப்பில் சமயத்துக்கு முன்னுரிமை **வழங்காத** நாடு எது?
1. பங்களாதேசம் 2. ஐக்கிய அமெரிக்கா3. பாகிஸ்தான் 4. நேபாளம்

31) ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அரசுக்குரிய அதிகாரமாகக் குறிப்பிடக் கூடியது .
1. சுகாதாரம் 2. கல்வி 3. வீடமைப்பு 4. நிதிநடவடிக்கை

32) மாகாணசபை ஒன்றின் அதிகாரங்களும் தொழிற்பாடுகளும் வகுக்கப்பட்டுள்ள நிரல்களில் இரண்டாம் நிரலில் அடங்கியுள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை.
1. 17 2. 37 3. 36 4. 27

33) மாகாணசபை ஒன்றின் ஆளுநரின் பதவிக்காலம் ( வருடங்களில்)

1. ஐந்து　2. ஆறு　3. நான்கு　4. ஐந்தரை

34) நாடு ஒன்றின் பிரசை ஒருவருக்குரிய அடிப்படை உரிமைகளை உள்ளடக்கிய முக்கிய ஆவணம்.

1. மனிதஉரிமைகள் பிரகடனம்　2. தண்டனைச் சட்டக்கோவை
3. அரசியல் யாப்பு　4. குடியியல் சட்டக்கோவை

35) அரசின் பிரதான இரண்டு வகைகளில் ஒன்று சமஷ்டி அரசு , மற்றையது.

1. சர்வாதிகாரஅரசு　2. சனாதிபதி அரசு　3.ஒற்றையாட்சி அரசு　4. தேசிய அரசு

36) அதிகாரப் பரவலாக்கத்தின் போது அவதானிக்கக் கூடிய பண்பியல்பானது.

1. எழுதப்பட்ட அரசியல் யாப்பு காணப்படல்
2. வேற்றுமையில் ஒற்றுமை காணப்படல்
3. தீர்மானங்கள் அனைத்தும் மத்திய அரசினால் எடுக்கப்படல்
4. அதிகாரத்தை எந்த நேரத்திலும் மீளப் பெறக் கூடியதாக இருத்தல்

37) உலகமயமாதல் காரணமாக உலகப் பொருளாதாரத்தில் காணப்படும் பண்பு **அல்லாதது**.

1. பல்தேசியக்கம்பனிகள் தோற்றம் பெறல்
2. மூலதனத் தளம்பல் காணப்படல்
3. தேசியநிதி வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லப்படல்
4. மூடிய பொருளாதாரக் கொள்கை அறிமுகமாதல்

38) சனநாயக அரசு ஒன்றில் மக்களுக்குரிய அதிகாரம்.

1. இறைமை எனப்படும்　2. சட்டபூர்வ அதிகாரம் எனப்படும்
3. சர்வசன வாக்குரிமை எனப்படும்,　4. சட்டத்தின் ஆட்சி அதிகாரம் எனப்படும்

39) அரசு ஒன்றின் அடிப்படைப் பண்புகள் இரண்டினை சரியாகக் காட்டும் விடைத் தொகுதி.

1. அரசாங்கம், எதிர்க்கட்சி　2. சனத்தொகை, எதிர்க்கட்சி
3. அரசாங்கம் ,சனத்தொகை,　4. எதிர்க்கட்சி, நிறைவேற்று அதிகாரம்

40) அரசின் அல்லது மக்களின் விருப்பங்களை கொள்கைகளாக மாற்றுவதன் மூலம் அதனை நடைமுறைக்குக் கொண்டு வரும் பிரதிநிதி அரசாங்கமாகும். இக்கருத்தை முன்வைத்த அரசியலறிஞர் யார்?

1. பேராசிரியர்.ஏ .வீ.டைசி　2. பேராசிரியர்.காணர்
3. கலாநிதி. கே.சீ.வியர்　4. பேராசிரியர். சீ. எப். ஸ்ட்ரோங்

. (1x40= 40 புள்ளிகள்)

## குடியியற் கல்வி II

- **முதலாம் வினா கட்டாயமானது**
- **முதலாம்** வினாவுக்கும் **மேலும் நான்கு** வினாக்களுக்கும் விடை எழுதுக
- ஏல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

1.

i. அரசியல் கட்சி முறையின் அனுகூலங்கள் **இரண்டு** குறிப்பிடுக.

ii. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலின் பண்புகள் **இரண்டு** எழுதுக.

iii. சனநாயப் பிரசைகளிடம் காணப்படும் பண்பியல்புகள் **இரண்டு** குறிப்பிடுக

iv. ஓற்றையாட்சி முறையின் நன்மைகள் **இரண்டு** தருக.

v. சுவிட்சர்லாந்தின் கென்ரன்களுக்குரிய அதிகாரங்கள் **இரண்டு** குறிப்பிடுக

vi. உற்பத்தி தொடர்பாக பயன்படுத்தக்கூடிய **இரு** நுட்பங்களைப் பெயரிடுக.

vii. கலந்துரரையாடல் மூலம் மோதல்தீர்வு காணப்படவேண்டிய சந்தர்ப்பங்கள் **இரண்டு** குறிப்பிடுக

viii. சட்டத்தின் பண்புகள் **இரண்டு** எழுதுக.

ix. மாவட்ட நீதிமன்றத்தினால் தீர்க்கப்படக்கூடிய **இரண்டு** வழக்குகளைக் குறிப்பிடுக.

x. 1972 ஆம் ஆண்டின் முதலாம் குடியரசு யாப்பில் ஏற்படுத்தப்பட்ட முக்கியமான **இரண்டு** அம்சங்களைப் பெயரிடுக (2x10= 20 புள்ளிகள்)

2.

i. சனநாயக ஆட்சி முறையின் **இரண்டு** பிரதான பிரிவுகளைக் குறிப்பிடுக. (2புள்ளிகள்)

ii. சுனநாயகம் ஒரு வாழ்க்கை முறை என்ற வகையின் அதற்குப் பழகிய மக்கள் சமூகத்தின் பண்புகள் **மூன்று** குறிப்பிடுக. (3புள்ளிகள்)

iii. அரசுகளில் நிலவும் கட்சிகளின் தன்மைகளின் அடிப்படையில் **மூன்று** வகைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றை** விளக்குக. (5புள்ளிகள்)

3.

i. அதிகாரப் பகிர்வு என்றால் என்ன? (2புள்ளிகள்)

ii. நவீன அரசுகள் அதிகாரப்பங்கீடு செய்வதற்கான காரணங்கள் **மூன்று** தருக? (3புள்ளிகள்)

iii. சமஷ்டி அரசுகளின் புதிய போக்குகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக. (5புள்ளிகள்)

4.

i. நல்லாட்சியின் அடிப்படைப் பண்புகள் **இரண்டு** தருக. (2புள்ளிகள்)

ii. பன்மைப் பண்பாட்டு சமூகத்தில் நல்லாட்சியை செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் **மூன்று** தருக? (3புள்ளிகள்)

iii. பன்மைப் பண்பாட்டு சமூகத்தில் ஒற்றுமையுடன் செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக. (5புள்ளிகள்)

5.

i. மனிதர்களது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்வது தொடர்பில் பயன்படும் பொருட்களின் **இரு** வகைகளையும் பெயரிடுக. (2புள்ளிகள்)

ii. உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு ,மூலதனம் என்பவற்றுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை முறையே எழுதுக. (3புள்ளிகள்)

iii. பொருளாதாரம் ஒன்றில் இடம்பெறும் உற்பத்தியின் **மூன்று** துறைகளையும் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றை** விளக்குக. (5புள்ளிகள்)

6.

i. சட்டத்தின் மூலாதாரங்கள் **இரண்டு** தருக. (2புள்ளிகள்)

ii. தேசிய சட்டத்தின் **மூன்று** வகைகளையும் குறிப்பிடுக. (3புள்ளிகள்)

iii. (a) உச்சநீதி மன்றத்தின் தலைவர் யார்? (1புள்ளிகள்)

(b) உச்சநீதி மன்றத்தின் அதிகாரங்கள் **நான்கு** எழுதுக. (4புள்ளிகள்)

7.

i. 1947 ஆம் ஆண்டின் சோல்பரி யாப்பின் அரசியல் சீர்திருத்தத்தின்படி உருவாக்கப்பட்ட பாராளுமன்றத்தின் **இரு** சபைகள் யாவை? (2புள்ளிகள்)

ii. சோல்பரி யாப்பின் மூலம் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட **மூன்று** அம்சங்களை எழுதுக. ( இருசபைப் பாராளுமன்றம் தவிர்த்து) (3புள்ளிகள்)

iii. 1978ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு யாப்பின் மூலம் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட **மூன்று** முக்கியமான அம்சங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றை** சுருக்கமாக விளக்குக. (5புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடமாகாணம்

**க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை**

**இரண்டாந் தவணை – 2018**

**சுட்டெண் : ...........................**

| குடியியற் கல்வி I, II | 62 | T | I, II | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|---|---|

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ❖ உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.

## பகுதி I

1. எதென்ஸ் நகராட்சியில் பிரதான ஆட்சி நிறுவனம்
   (1) சட்டமன்றம் (2) பாராளுமன்றம் (3) மக்கள் மன்றம் (4) நாடாளுமன்றம்
2. சீனா, வடகொரியா, கியூபா போன்ற நாடுகளில் காணப்படும் அரசியல் கட்சிமுறை
   (1) ஒருகட்சிமுறை (2) இருகட்சிமுறை (3) பலகட்சிமுறை (4) கூட்டுகட்சிமுறை
3. இலங்கையில் தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை.
   (1) 09 (2) 20 (3) 25 (4) 22
4. ஓர் இனத்துக்கு ஓர் அரசு என்ற கோட்பாட்டில் உருவான அரசு.
   (1) மானிய அரசு (2) தேசிய அரசு (3) ஒற்றையாட்சிஅரசு (4) கூட்டாட்சிஅரசு
5. ஜனநாயக சமூகத்தில் பிரஜையின் ஒழுக்கவியல் கடமை.
   (1) வரி செலுத்துதல் (2) சட்டங்களை மதித்தல்
   (3) பெரியோரை மதித்தல் (4) யாப்பினைப் பாதுகாத்தல்
6. மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுக்கும் இடையில் அதிகாரப்பகிர்வு நடைபெறும் ஆட்சிமுறை.
   (1) ஒற்றையாட்சி (2) கூட்டாட்சி (3) அரைகுறைசமஷ்டி (4) ஜனநாயகஆட்சி
7. மாகாணசபையில் அமைச்சரவையின் அங்கத்தவர் எண்ணிக்கை.
   (1) முதலமைச்சரையும் நான்கிற்கு மேற்படாத அமைச்சர்களையும் கொண்டது.
   (2) முதலமைச்சர் உட்பட நான்கு பேரைக் கொண்டது.
   (3) முதலமைச்சரையும் ஐந்து அமைச்சர்களையும் கொண்டது.
   (4) ஆளுநர், முதலமைச்சர் உட்பட ஐந்து அமைச்சர்களைக் கொண்டது.
8. ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அரசின் அதிகாரத்தில் உள்ளடங்குவது.
   (1) கல்வி (2) சுகாதாரம் (3) வீடமைப்பு (4) நிதி
9. சுவிட்சர்லாந்து நாட்டில் நிறைவேற்றுத்துறையை அழைப்பது.
   (1)சமஸ்டிப்பேரவை (2) சமஸ்டிசபை
   (3) தேசியசபை (4) அரசசபை

10. மாகாணசபைக்குரிய அதிகாரங்கள் அடங்கிய பட்டியலில் உள்ள விடயங்களின் எண்ணிக்கை.

(1) 17 அதிகாரங்கள் (2) 36 அதிகாரங்கள்

(3) 37 அதிகாரங்கள் (4) 15 அதிகாரங்கள்

11. இலங்கையில் பன்மைப்பண்பாட்டு சமூகம் உருவாகுவதில் ஆக்கிரமிப்பு ஒரு காரணி ஆகும். அதற்கு எடுத்துக்காட்டாக அமைவது.

(1) விஜயனும் தோழர்களும் வருகை (2) பண்டுவாசுதேவன் குழுவின் வருகை

(3) பண்டுபாரிந்த வருகை (4) மகிந்ததேரர் குழுவின் வருகை

12. நல்லாட்சியின் பண்பாக அமையக்கூடியது.

(1) வெளிப்படையற்ற தன்மையில் செயற்படல்.

(2) சுதந்திரமும், சமூக நீதியும் மட்டுப்படுத்தல்.

(3) ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்தல்.

(4) பொறுப்புக்கூறுவதை கட்டுப்படுத்தல்.

13. நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி ஆகிய உற்பத்திக்காரணிகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் முறையே.

(1) வாடகை, கூலி, வட்டி, இலாபம் (2) வட்டி, கூலி, வாடகை, இலாபம்

(3) வாடகை, வட்டி, கூலி, இலாபம் (4) வட்டி, கூலி, இலாபம், வாடகை

14. பொருளாதாரமில்லாப் பண்டங்களின் இயல்பு.

(1) உற்பத்தி செலவு காணப்படும். (2) விலை செலுத்த வேண்டும்.

(3) இலவசமாகக் கிடைக்கும் (4) நுகர்வால் பாதிப்பு ஏற்படும்.

15. பொருளாதாரத்தில் மனிதர்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் வளங்களை மாற்றிக்கொள்வது.

(1) நுகர்வு (2) பரிமாற்றம் (3) விநியோகம் (4) உற்பத்தி

16. சந்தைப்பொருளாதார முறை பின்பற்றும் நாடுகளில் சமதர்மப்பொருளாதாரத்தின் சந்தை இயல்பினை அதிகமாகக் கொண்ட நாடுகளின் தொகுதி.

(1) ரஷ்யா, சிங்கப்பூர் (2) ரஷ்யா, சீனா (3) ஜப்பான். சிங்கப்பூர் (4) சிங்கப்பூர், தாய்வான்

17. வங்காளவிரிகுடாவைச் சூழவுள்ள நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு அமையம்.

(1) பிம்ஸ்டெக் (2) சப்தா

(3) ஐரோப்பிய ஒன்றியம் (4) நப்ரா

18. மோதல் முக்கோணத்தின் தந்தை.

(1) ஜோஹன்பேக் (2) காணர்

(3) ஜொஹான் கல்டுன் (4) அரிஸ்டோட்டில்

19. அரசியல் மற்றும் சமூக, பொருளாதார ரீதியில் நிலவும் கருத்து வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டு எழும் மோதல்.

(1) வெளிப்படையான மோதல் (2) அண்மையான மோதல்

(3) கொள்கை ரீதியான மோதல் (4) யுத்த ரீதியான மோதல்

20. இஸ்ரேல் பாலஸ்தீன நாடுகளிடையே மோதலுக்கான காரணம்.

(1) வளப்பிரச்சனை (2) எல்லைப்பிரச்சனை

(3) சந்தைப்பிரச்சனை (4) சாதிப்பிரச்சனை

21. முஸ்லிம்களின் விவாகரத்து தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் நீதிமன்றம்.

(1) நீதவான் நீதிமன்றம் (2) மாவட்ட நீதிமன்றம்

(3) இணக்கமன்றம் (4) காதிநீதிமன்றம்

22. உயர்நீதிமன்றத்திற்குரிய நீதியரசர்களின் எண்ணிக்கை.

(1) பிரதம நீதியரசரும் 10 நீதிபதிகளும்.

(2) பிரதம நீதியரசருடன் 5 நீதிபதிகளும்.

(3) பிரதம நீதியரசர்கள் 5 பேருடன்.

(4) பிரதம நீதியரசருடன் 10 நீதிபதிகளும்.

23. நீதித்துறைக்குரிய சட்டவரைவுகளைப் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்து தேவையான சட்டங்களை இயற்றுவதற்குப் பொறுப்பானவர்.

(1) நீதி அமைச்சர் (2) பிரதமநீதியரசர்

(3) சட்டமாஅதிபர் (4) நிதிஅமைச்சர்

24. சோல்பரியாப்பின்படி இறுதிமேன்முறையீட்டு நீதிமன்றமாக செயற்பட்டது.

(1) உயர்நீதிமன்றம் (2) கோமறைக்கழகம்

(3) மேன்முறையீட்டுநீதிமன்றம் (4) அரசியலமைப்பு நீதிமன்றம்

25. 1978ஆம் ஆண்டு 2ஆம் குடியரசு யாப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட விடயம்.

(1) ஜனாதிபதி முறை (2) தேசியஅரசுப்பேரவை

(3) அரசியலமைப்பு நீதிமன்றம் (4) விகிதாசாரப்பிரதிநிதித்துவம்

26. அநுராதபுர யுகத்தில் நகர நிர்வாகத்துக்குரிய பதவிப்பெயர்.

(1) கமிக (2) காம்போஜக

(3) நகர குத்திக (4) திசாவை

27. பிரதேசசபை உருவாக்கத்திற்கான கட்டளைச்சட்டம்.

(1) 1939ஆம் ஆண்டு 61ஆம் இலக்க கட்டளைச்சட்டம்

(2) 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க கட்டளைச்சட்டம்

(3) 1947ஆம் ஆண்டு 16ஆம் இலக்க கட்டளைச்சட்டம்

(4) 1980ஆம்ஆண்டு 20ஆம்இலக்க கட்டளைச்சட்டம்

28. நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவர்.

(1) ஜனாதிபதி (2) பிரதம நீதியரசர்

(3) நீதி அமைச்சர் (4) நீதிபதி

29. A. – சட்டத்திற்கு விளக்கமளித்தல்

B. – சட்டம் இயற்றுதல்

C. – மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

D. – சட்டங்களை அங்கீகரித்தல்

மேலே தரப்பட்ட விடயங்களில் நீதித்துறைக்குரிய அதிகாரங்கள்

(1) A யும் C யும் (2) Aயும் B யும்

(3) C யும் D யும் (4) A யும் D யும்

30. ஐக்கிய நாடுகள் சபையால் மனித உரிமைப்பிரகடனம் வெளியிடப்பட்டது.

(1) 1948 ஜனவரி 10ஆம் திகதி (2) 1948 டிசம்பர் 10ஆம் திகதி

(3) 1945 டிசம்பர் 10ஆம் திகதி (4) 1945 ஜனவரி 10ஆம் திகதி

31. "சீடோவ்" (CEDAW) என்ற அமைப்பின் நோக்கம்

(1) திருமணமாகாத இளம் பெண்களை பாதுகாத்தல்.

(2) திருமணமான பெண்களை பாதுகாத்தல்.

(3) பெண்களுக்கெதிரான பாரபட்சங்களை ஒழித்தல்.

(4) பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குதல்.

32. பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமையாவது.

(1) கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம்.

(2) இலவச கட்டாயக் கல்வியை பெறும் உரிமை.

(3) தனிப்பட்ட பாதுகாப்பிற்கான உரிமை.

(4) விரும்பிய சமயத்தை பின்பற்றும் சுதந்திரம்.

33. 1980இல் நடைமுறைக்கு வந்த தேசிய சுற்றாடல் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனம்.

(1) சுற்றாடல் அமைச்சு (2) வனப்பாதுகாப்புத் திணைக்களம்

(3) சுற்றாடல் திணைக்களம் (4) மத்திய சுற்றாடல் அதிகாரசபை

34. இலங்கையில் அடிப்படை உரிமைகளை முதலில் உள்ளடக்கிய யாப்பு.

(1) 1972 1ஆம் குடியரசு யாப்பு (2) 1978 2ஆம் குடியரசு யாப்பு

(3) 1948 சோல்பரி யாப்பு (4) 1931 டொனமூர் யாப்பு

35. சிறுவர் உரிமை சமவாயத்தின் உறுப்புரை 28இல் உள்ள விடயம்.

(1) சிறுவர்களின் வயது (2) வாழ்வதற்கான உரிமை

(3) குழந்தைகளின் பிறப்புப் பதிவு (4) கல்வியைப் பெறும் உரிமை

36. உயிரினங்களின் இருப்புக்கு அவசியமான சேவைகளை ஆற்றுபவை

(1) சூரியஒளி, கனியநெய், மின்சாரம் (2) சூரியஒளி, காற்று, நீர்

(3) நீர், மின்சாரம், சூரியசக்தி (4) காற்று, கனியநெய், மின்சாரம்

37. சமூக சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுவதனால் உருவாகுவது.

(1) சமூக நீதி ஏற்படும்.

(2) சமூகத் தொடர்புகள் வலுவடையும்.

(3) சமூக விரோதச் செயல்கள் குறைவடையும்.

(4) குடும்ப அமைப்பு சீர்குலையும்.

38. வர்த்தகப் பிரச்சனைகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் உள்ள நீதிமன்றமாவது

(1) மேன்முறையீட்டு நீதிமன்றம் (2) மாகாண மேல்நீதிமன்றம்

(3) மேல் நீதிமன்றம் (4) உயர் நீதிமன்றம்

39. இலங்கையில் ஆதிவாசிகளுக்கான "பழங்குடி மக்கள் சங்கம்" என்ற அமைப்பு உருவாக ஏதுவான அமைப்பு.

(1) ஐக்கியநாடுகள் சபை (2) சிறுவர் உரிமை சமவாயம்

(3) உலக தொழிலாளர் அமையம் (4) மனித உரிமை ஆணைக்குழு

40. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தில் அடங்கியுள்ள உறுப்புரைகளின் எண்ணிக்கை

(1) 30 (2) 29 (3) 28 (4) 27

(40x01= 40 புள்ளிகள்)

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானதாகும்.**
- **முதலாம் வினாவும் வேறு நான்கு வினாக்களும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

1. i. ஜனநாயக ஆட்சி முறையின் இரண்டு பிரதான பிரிவுகளை எழுதுக.

ii. தேர்தல் தொகுதிகள் மூலம் பிரதிநிதிகளை தெரிவு செய்வதன் நன்மைகள் இரண்டு தருக?

iii. அரசுகளில் நிலவும் பல்வேறுபட்ட தன்மைகளின் அடிப்படையில் கட்சி முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக?

iv. ஒற்றையாட்சியின் இரண்டு பண்புகளைக் குறிப்பிடுக?

v. சுவிட்சர்லாந்தின் கென்ரன்களுக்குரிய அதிகாரங்கள் இரண்டைப் பெயரிடுக.

vi. உற்பத்தி தொடர்பாகப் பயன்படுத்தக் கூடிய பிரதான நுட்பமுறைகள் இரண்டைக் குறிப்பிடுக?

vii. உள்ளக மோதல்களின் இரண்டு வகைகளையும் குறிப்பிடுக?

viii. குற்றவியல் சட்டத்தில் தண்டனைக்குட்படும் பாரிய குற்றச்செயல்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

ix. பெண்களின் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளில் இரண்டினைக் குறிப்பிடுக?

x. மனிதனது செல்வாக்கின்றி இயங்குகின்ற இயற்கைத் தொகுதிகளில் இரண்டினைக் குறிப்பிடுக?

(2x10 = 20 புள்ளிகள்)

02. i. அரசாங்க முறைகளின் வகைகள் இரண்டையும் எழுதுக?

(2 புள்ளிகள்)

ii. அரசின் பிரசைகள் மீதான பொறுப்புக்கள் மூன்று தருக?

(3 புள்ளிகள்)

iii. ஜனநாயக ஆட்சிமுறை வெற்றிபெற அவசியமான காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக?

(5 புள்ளிகள்)

03. i. இலங்கையில் மாகாணசபை முறை உருவாகுவதற்கு ஏதுவான இரு சட்டங்களையும் குறிப்பிடுக?

(2 புள்ளிகள்)

ii. மாகாணசபை ஆளுநரின் அதிகாரங்கள் பணிகள் மூன்றினைக் குறிப்பிடுக?

(3 புள்ளிகள்)

iii. 1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின்படி 13ஆம் சீர்திருத்தத்தின் III வது நிரலில் உள்ள அதிகாரங்கள் மூன்றினைத் தந்து அவற்றுள் ஒன்றினை விளக்குக?

(5 புள்ளிகள்)

04. 1. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் அடிப்படைப் பண்புகள் இரண்டு தருக?

(2 புள்ளிகள்)

2. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் நல்லாட்சியை செயற்படுத்துவதில் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக?

(3 புள்ளிகள்)

3. இலங்கையில் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாகுவதில் செல்வாக்கு செலுத்தும் மூன்று காரணிகளைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக?

(5 புள்ளிகள்)

05. i. மூலதனப் பொருட்களில் இரண்டினை எழுதுக?

(2 புள்ளிகள்)

ii. பொருளாதாரம் ஒன்றின் பல்வேறு செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அவற்றை பிரதானமாக மூன்று பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம் அம்மூன்று பிரிவுகளையும் குறிப்பிடுக?

(3 புள்ளிகள்)

iii. நாடுகளில் நிலவும் பிரதான பொருளாதார முறைகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினைப் பற்றி சுருக்கமாக விளக்குக?

(5 புள்ளிகள்)

06. i. இலங்கையில் செயற்படும் சட்டத்தொகுதிகள் இரண்டினைத் தருக?

(3 புள்ளிகள்)

ii. இலங்கை நீதி நிர்வாகக் கட்டமைப்பில் உயர்நீதி மன்றத்துக்கு அடுத்து சிரேஷ்ட நீதி மன்றமாக விளங்கும் மேன்முறையீட்டு நீதி மன்றத்தின் அதிகாரங்கள் மூன்றினைத் தருக.

(3 புள்ளிகள்)

iii. a. இலங்கையில் தற்போதைய சட்டமா அதிபர் பதவி எத்தனையாம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

(1 புள்ளி)

b. இலங்கையில் பிரதான சட்டஅலுவலராகிய சட்டமாஅதிபர் யாரால் நியமிக்கப்படுகின்றார்.

(1 புள்ளி)

c. சட்டமா அதிபரின் பணிகள் மூன்றினைத் தருக.

(3 புள்ளிகள்)

(மொத்தம் 5 புள்ளிகள்)

07. i. மனிதன் தனது உரிமைகளைப் பெற்றுக்கொண்ட வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக?

(2 புள்ளிகள்)

ii. மனித உரிமைகளில் மூன்றினைக் குறிப்பிடுக?

(3 புள்ளிகள்)

iii. a. சிறுவர் உரிமைகளில் தொடர்பான உடன்படிக்கையை ஏற்படுத்தும் போது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட சர்வதேச ஆவணங்கள் இரண்டு தருக?

(2 புள்ளிகள்)

b. சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிடுக?

(3 புள்ளிகள்)

(மொத்தம் 5 புள்ளிகள்)

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை – 2020

### தரம் - 11 | குடியுரிமைக்கல்வி

பெயர் / சுட்டெண் : .....................

திரு.ஸ்ரீரங்கநாதன் B.A(Hons), M.A(Political), PGDE

**அனைத்து வினாக்களிற்கும் விடையளிக்குக.**

**அலகு – 01**

01. சட்டம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துக?
.................................................................................................
.................................................................................................
02. சட்டத்தின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக?
.................................................................................................
.................................................................................................
03. சட்டத்தின் மூலாதாரங்களாக அமையும் விடயங்களைக் குறிப்பிடுக?
.................................................................................................
.................................................................................................
04. சட்டத்தின் இரு வகைகளையும் குறிப்பிட்டு, அதில் தேசிய மட்டம் தொடர்பாக சுருக்கமாக விளக்குக?
.................................................................................................
.................................................................................................
05. இலங்கையின் நீதிமன்ற முறைமையில் அதியுயர் நீதிமன்ற முறைமையில் அதியுயர் நீதிமன்றங்கள் இரண்டை வரிசையொழுங்கில் பெயரிடுக?
.................................................................................................
.................................................................................................
06. நாடென்றில் சட்டத்தைப் பிறப்பிப்பதன் நோக்கங்கள் மூன்றைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றை விளக்குக?
.................................................................................................
.................................................................................................
07. நாட்டில் சட்டத்தின் ஆட்சி காணப்படாதவிடத்து ஏற்படும் விளைவுகள் யாவை?
.................................................................................................
.................................................................................................
08. சட்டத்தின் மேன்மையைப் பேணுவதற்குப் பிரசையென்ற வகையில் உம்மால் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் மூன்றைக் குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக.
.................................................................................................
.................................................................................................
09. சட்டமா அதிபரின் பணிகள் சிலவற்றை எழுதுக?
.................................................................................................
.................................................................................................
10. இலங்கையில் நீதித்துறைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை சுருக்கமாக விளக்குக?
.................................................................................................
.................................................................................................
11. இலங்கையில் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கான பொறிமுறைகள் யாவை?
.................................................................................................
.................................................................................................

12. தாமதமின்றியும் பக்கச்சார்பற்ற முறையிலும் நீதி வழங்கப்படாமையால் ஏற்படக்கூடிய பாதவ விடயங்களைக் குறிப்பிடுக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

## அலகு – 02

01. ஒற்றையாட்சி, அதிகாரப்பரவலாக்கம் மற்றும் மாகாண சபை முறை என்பவற்றைச் சுருக்கமாக விளக்குக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

02. அதிகாரப்பரவலாக்கத்தின் போது ஏற்படும் பிரச்சினைகளுள் நான்கினைக் குறிப்பிடுக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

03. இலங்கைப் பாராளுமன்றத்தின் அமைவுச் சேர்க்கையினை சுருக்கமாக விளக்குக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

04. இலங்கையின் நிறைவேற்று நிர்வாகத்தின் பொதுவான செயற்பாடுகளை சுருக்கமாக விளக்குக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

05. இலங்கையில் நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களைப் பெயரிடுக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

06. உள்ளூராட்சி நிறுவனங்களின் பயன்களுள் நான்கினைக் குறிப்பிடுக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

07. இலங்கையில் மத்திய அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு பிரசையொருவர் ஆற்ற வேண்டிய கடமைகள் மூன்றை விபரிக்குக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

08. இலங்கையில் மாகாண சபைகள் உருவாக்கப்படுவதில் செல்வாக்குச் செலுத்திய சட்டரீதியான ஏற்பாடுகள் இரண்டையும் பெயரிடுக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

09. மாகாண சபையின் செயற்பாடுகளை கணண்காணிக்கும் மத்திய அரசின் பிரதிநிதியை குறிப்பிட்டு, சுருக்கமாக விளக்குக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

10. இலங்கையில் மாகாண சபை முறைமை உருவாக்கப்படுவதன் நோக்கங்கள் யாவை?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

11. இலங்கையின் நீதிமன்றங்களினால் ஆற்றப்படும் பிரதான பணிகளுள் நான்கினை எழுதுக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

12. இலங்கை உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை மூன்று தலைப்புக்களில் நோக்கலாம். அவை எவை?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………